# இரட்சிப்பு
RATCHIPPU

RATCHIPPU = SALVATION


Volume-12 | August-2022 | Issue-03

Price Rs.5-00 | Annual Subscription Rs.60/-





இந்தியா சுதந்திர தினம் ஆகஸ்டு 15, 2022


## தேசமே பயப்படாதே

கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்
மகிழ்ந்து களிகூறு

விடுதலை கொண்டாடு
இனிய சுதந்திர
தின வாழ்த்துக்கள்



## இயக்குநர் கடிதம்... From Mission Director's Desk




கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இயேசுவின் இனிய திருப்பெயரில் அன்பின் சுதந்திரதின வாழ்த்துக்கள். கடந்த மாதத்தில் கொரோனா பெருந்தொற்றின் தாக்கம், தமிழ்நாடு உட்பட நாட்டில் அதிகரித்து வருவதாகச் செய்திகள் வந்தன. உயிர்சேதம் அதிகம் இல்லை, எனினும் பரவல் அதிகரித்து வந்தது. முகக்கவசம், கை-சுத்திகரிப்பு, சமூக இடைவெளி, தடுப்பூசி ஆகிய பாதுகாப்பு முறைகளை கடைபிடித்ததின் விளைவாக பெருந்தொற்று பேரலையாக மாறாதபடி கர்த்தர் உதவி செய்தார். கொரோனா பெருந்தொற்றின் ஓமிக்ரான் வடிவத்தின் பிஏ-4 மற்றும் பிஏ-5 வகைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. தொடர்ந்து கொரோனா மற்றும் இந்நாட்களில் பரவிவரும் குரங்கு-அம்மை தொற்றுகள் அழிக்கப்படும் வகையில் பாதுகாப்பு நெறிமுறைகளை கடைபிடிக்கவும் இரட்சிப்பு குடும்பத்தாராகிய எங்களுடன் இணைந்து கர்த்தரை நோக்கி கருத்துடன் ஜெபித்திடவும் அன்புடன் அழைக்கிறோம்.

நம் ஊழியங்களுக்கான **GOOD TIDINGS - RATCHIPPU HOME** என்ற வலைதளம் www.ratchippu.in/ratchippu.in என்ற முகவரியில் செயல்பட்டு வருகிறது. மாதந்தோறும் தேவசெய்தி, திருச்சபை-சரிதை, வசன-தியானம், சங்கீத-தியானம், கர்த்தரின்-நாமங்கள், வேசவசன-கதைகள், வேத-வினாக்கள் போன்ற பகுதிகளை வலைதளத்தில் பதிவேற்றம் செய்கிறோம். இரட்சிப்பு வலைதளத்துக்கு விஜயம்செய்து தேவாசீர்வாதம் பெற அன்புடன் அழைக்கி றோம். இம்மாத 'ஜெப-ஜன்னல்'- ஜெபங்கள் 12, 19, 26 தேதிகளில் நடைபெறும். 'அனைவரும்-ஊழியத்தில்' கைபிரதி ஊழிய திட்டம் வழியாய் நற்செய்திப் பணியில் எங்களுடன் இணைந்திட அனைவரையும் அழைக்கிறோம். வேதாகம போட்டிக்கான பதில்கள், ஜெப-குறிப்புகள், அனுபவ சாட்சிகள் மற்றும் காணிக்கை அனுப்புவோர் ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்பிவையுங்கள் (Online-வங்கி மற்றும் தொடர்பு விபரம் பக்கம் 19-ல்). கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில் உங்கள் உடன் ஊழியன்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

**வேத-வரிகள்-140** **கலாத்தியர்-5:13**

# தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு

### சத்திய வேதம் (ரேனியஸ்-1840)

சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்களே, இந்தச் சுயாதீனத்தை நீங்கள் சரீரத்திற்கேற்றதாக அநுசரியாமல் அன்பினாலே ஒருவருக் கொருவர் ஊழியஞ் செய்யுங்கள்.

### பரிசுத்த வேதாகமம் (பவர்-1867)

சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல் அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்.

### திருவிவிலியம் (பொது-1995)


அன்பர்களே, நீங்கள் உரிமை வாழ்வுக்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்; அந்த உரிமை வாழ்வு ஊன் இயல்பின் செயல்களுக்கு வாய்ப்பு ஆகாதபடி, ஒருவருக்கு ஒருவர் அன்பின் அடிமைகளாய் இருங்கள்.

### பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)


சகோதர சகோதரிகளே, நீங்கள் சுதந்திரமாய் இருக்க அழைக்கப்பட்டீர்கள். பாவ காரியங்களுக்காக அச்சுதந்திரத்தைப் பயன்படுத்தாமல் ஒருவருக்கொருவர் அன்புடன் சேவைசெய்யுங்கள்.

வசன தியானம் - 134

# விடுதலை வாழ்வு வாழ அழைப்பு



## அழைப்பவர் கர்த்தர்



**Galatians-5:13**


கலாத்தியர்-5:13

நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள்,
இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக
அநுசரியாமல் அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள். கலா–5:13

இந்தப் பூமியையும் அதின் நிறைவையும் சிருஷ்டித்த தேவனாகிய கர்த்தர், அவைகளை ஆளுகை செய்யும்படிக்கு மனிதனை ஆசீர்வதித்தார். தேவன் தமது சாயலாக மனிதரைச் சிருஷ்டித்தார். அவர்களை தேவசாயலாகவே சிருஷ்டித்தார். பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்.

தேவ சாயலாக சிருஷ்டிக்கபட்ட மனிதர் வானத்தின் சேனைகள், ஆகாயத்துப் பறவைகள், பூமியின் மிருகங்கள், ஊரும் பிராணிகளின் ஆகியவற்றின் சாயலிலே தங்களுக்கு தேவர்களை உண்டாக்கிக் கொண்டனர். தாங்கள் ஆளுகை செய்ய வேண்டியவைகளை, தங்களை ஆளுகை செய்யும்படி ஏற்படுத்தியது மட்டுமல்லாமல், அவைகளை தங்கள் வாழ்க்கையிலே தேவனுக்கு சமமாக உயர்த்திவிட்டனர். இதனாலே, மெய்யான தேவன் யார் என்பதை மறந்து போனது மட்டுமல்லாமல், மாமிச-சிற்றின்ப இச்சையிலே வாழும்படிக்கு தங்கள் சந்ததியாரின் மனக்கண்களையும் குருடாக்கி விட்டனர். கடவுள் தந்த சுயாதீனத்தை உதாசீனம் செய்து, தங்கள் துர்குணத்துக்கு மூடலாகக்கொண்டு, தங்களைத் தாங்களே அடிமைத்தன நுகத்திற்கு உட்படுத்திக் கொண்டனர் (1பேது-2:16).

‘‘யாருக்கு என்னை சாயலும் சமமாக்கி, யாருக்கு என்னை ஒப்பிடுவீர்கள்? பையிலிருக்கிற பொன்னைக்கொட்டி, வெள்ளியைத் தராசில் நிறுத்து, தட்டானுடனே கூலிபொருத்துகிறார்கள்; அவன் ஒரு தெய்வத்தை உண்டாக்குகிறான்; அதை பணிந்துகொள்ளுகிறார்கள். அங்கே அது நிற்கும்; தன் இடத்தைவிட்டு அசையாது. ஒருவன் அதை நோக்கிக் கூப்பிட்டால், அது மறுஉத்தரவு கொடுக்கிறதுமில்லை, அவன் இக்கட்டை நீக்கி அவனை இரட்சிக் கிறதுமில்லை.’’ (ஏசா 46:5-7) என கடவுள் நம்மை எச்சரிக்கிறார்.



அருட்திரு. தர்மராஜா

பிரியமானவர்களே! தேவன் நம்மை அடிமைத்தனத்திற்கல்ல, சுயாதீனத் திற்கென்றுதான் அழைத்திருக்கிறார் (கலா-5-13). தேவசாயலிலே படைக் கப்பட்ட நாம், உலகம், மாமிசம், பிசாசு, ஆகியவற்றுக்கு அடிமைப் படாமல், அன்பின் சேவையில் விடுதலை வாழ்வு வாழ நம்மை அர்ப்பணிப்போம்.

ஜெபம்: விடுதலையின் தேவனே! படைப்பாளராகிய உம்மை மறந்து, படைப்புக்களால் ஆளப்பட்டு, உலகத்துக்கும், மாமிசத்துக்கும் அடிமைப் படாதபடிக்கு, எப்போதும் உம்மையே சார்ந்து வாழ எங்களுக்கு கிருபை செய்வீராக. இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமேன்.

படைப்பு: REV. SJD. தர்மராஜா, ஆயர் & அபிவிருத்திச் செயலர், இந்திய சுதேச மிஷனரி சங்கம், சென்னை.
REV. SJD. DHARMARAJA, PRESBYTER & HON. PROMOTIONAL SECRETARY, NATIONAL MISSIONARY SOCIETY OF INDIA

விடுதலைத் திருநாள் சிறப்புதேவசெய்தி...



அருட்திரு
சைமன் சாமுவேல்

# அடையாத விடுதலை

## Unattained Liberation

ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனிதருடைய கிரியைகள் பொல்லாதவைகளாய் இருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத்தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது. யோவான்–3:19

கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய மக்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான். 2கொரிந்தியர்–4:4

**Rev. D. Simon Samuel**
Presbyter
CSI Pothaturpet Pastorate (Diocese of Madras), Thiruvallur Dist., South India

15 ஆகஸ்ட் 1947 அன்று அதிகாலை இந்தியா ஆங்கிலேயருடைய கொடுங்கோல் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றது. பின்னர் 1950-ல் குடியரசு நாடாக உருப் பெற்றது. இந்த வருடத்தோடு இந்தியா விடுதலை பெற்று 75-ஆண்டுகளை நிறைவு செய்கிறது எனினும் பல நிலைகளில், சூழல்களில் இன்றும் நம்முடைய விடுதலை கேள்விக்குறியாகவே உள்ளது.

இந்தியாவை 200-ஆண்டுகள் ஆட்சிசெய்த ஆங்கிலேயர், அனைத்து மக்களையும் அடிமைகளாக பாவித்தனர். ஆனால், இன்று விடுதலை பெற்று குடிமக்களினால் ஆளப்படும் இந்தியா மொழி, மதம், சாதி என்கிற பல நிலையில் பகுத்தாளப்பட்டு, பலகோடி இந்திய மக்கள் ‘விடுதலையாக்கப்பட்ட அடிமைகள்’-ஆக வாழ்ந்து கொண்டிருகிறார்கள். நம்முடைய திருச்சபைகளிலும் இதே நிலைதான் இருக்கிறது என்பதை அறிந்துணர்ந்து மனவேதனை அடைகிறோம். கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரும், நான் இரட்சிக்கப்பட்டேன், திருமுழுக்கு பெற்றேன், திடப்படுதல் பெற்றேன், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றேன் என்று பெருமையோடு சொல்லிக்கொள்வது உண்டு. இருப்பினும், நம்மை நாமே சற்று உற்றுநோக்கிப் பார்க்கும்போது நாம் பல நிலைகளில், சூழல்களில் இன்னும் இயேசுவை அறியா தவர்கள்போல் ‘இரட்சிக்கப்பட்ட பாவி’-ஆக வாழ்ந்துகொண்டிருகிறோம் என்பதை

கொண்டு அடிமையாகவும், இரட்சிக்கப்பட்டேன் என்று சொல்லிக்கொண்டு பாவியா கவும் இருக்கிறோம். இப்படிப்பட்ட நிர்பந்தமான நிலையிலிருந்து நம்மை விடுவிக் கும்படியாக இயேசு கிறிஸ்து இப்பூவுலகில் அவதரித்து விடுதலைப் பணியை செய்தார். இதை அப்போஸ்தலர் நடபடிகள் சாட்சியாக பதிவுசெய்கிறது, ‘‘நசரேய னாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவ ராயும் பிசாசின் பிடியில் அகப்பட்ட யாவரையும் குணமாக்கு கிறவராயும் சுற்றித்திரிந் தார்’’ (அப்-10:38). இந்த சாட்சி வசனத்தின் துணை கொண்டு பரம்பரை கிறிஸ்தவர் களாக, படித்தறிந்த கிறிஸ்தவர்களாக, பரிசுத்த மான கிறிஸ்தவர்களாக வாழ்கிறோம் என நம்மைக்குறித்து கூறிக்கொள்ளும் உண்மை நிலையை நிதானித்து பார்போம்.

பாரம்பரியச் சிறை (பாரம்பரியம் என்னும் சிறை):

பரம்பரை கிறிஸ்தவர்கள் பலர் அனேகமாக சிக்கித்தவிக்கும் சிறைகளில் ஒன்றுதான் பாரம்பரியச்-சிறை. இப்படிப்பட்ட பாரம்பரியவாதிகளை இயேசு கிறிஸ்து கடுமையாக எதிர்த்ததை திருமறையில் காணமுடியும். ஓரிரு நாள், ஓரிருவருடைய தேவைக்கான பழக்கங்களாக இருந்தவை பின்னர் பாரம்பரியங்க ளாகவும், போதனைகளாகவும், பின்னர் அவற்றை கடைபிடிக்காதவர்களுக்கு குற்றதண்டனை வழங்கும் எழுதாத-சட்டங்களாகவும் மாறிவிட்டிருக்கின்றன. எதற்காக ஞானஸ்நானம் என்ற நிலை மாறி, எப்போது? எப்படி? எங்கே? என்பதே கருத்தாக மாறிவிட்டது. இவ்வகையில் திருவிருந்தும் அடங்கும்.

இதில் குறிப்பிடத்தக்கது, இயேசுகிறிஸ்து அப்போஸ்தலருக்கு போதித்த பிதாவின் வாக்குத்தத்தமாகிய ‘அபிஷேகம் என்னும் பரிசுத்தஆவியின் ஞானஸ்நானம்.’ அபிஷேகம் குறித்த சத்தியம்: பாவநாசர் இயேசுவுக்கே பரிசுத்தஆவியின் அபிஷேகம் அடிப்படைத் தேவையாய் இருந்தபோது, நிர்பந்தமான பாவநேசர் களாகிய நமக்கு அது எவ்வளவு முக்கியம் என்பதை உணர்த்தாமல் தடுத்து விட்டது பாரம்பரியத்தின் தந்திரம். ‘அபிஷேகம்’ என்ற வார்த்தையை கேட்டாலே ஒரு சில சபை பிரிவினருக்கு ‘அமிர்தம்’-ஆகவும், வேறு சில சபைப் பிரிவினருக்கு ‘அலர்ஜி’-ஆகவும் இருப்பது பாரம்பரியத்தின் பரிணாமமே.

பகுத்தறிவுச் சிறை (பகுத்தறிவு என்னும் சிறை):

படித்தறிந்து பகுத்தறிவு பெற்ற கிறிஸ்தவர்கள் பலர் சிக்கித்தவிக்கும் சிறையே பகுத்தறிவுச்-சிறை. திருமறை, அதின் உருவாக்கம், திருச்சபை மற்றும் அதன் வரலாற்று பிண்ணனியத்தை அறிந்த இவர்கள் பழமைவாதிகளை மிஞ்சும் அளவுக்கு

அடிப்படைவாதத்தைப் பேசுவார்கள். தாங்கள் பகுத்தறிவு உடையவர்கள் என்ற எண்ணமே அவர்களது பகுத்தறியப்பட்ட சிந்தனையியை சிறையில் தள்ளிவிடுகிறது. குறிப்பாக நம் கடவுளின் தன்மை களை, நிலைகளை, பரிமாணங்களை புரிந்து கொள்ள 'திரித்துவம்' என்கிற கருத்தை பயன்படுத்துகிறோம். இவைபோன்ற மற்ற கருத்துகளும் கடவுளை புரிந்துகொள்ள மனிதன் எடுக்கும் முயற்சிகளே. இப்படியிருக்க இவைகளை படித்தறியும் கிறிஸ்தவர்கள் இவையே இறுதியான புரிதல் அல்லது கருத்து என முடிவுசெய்து, எல்லாம் அறிந்தவர்கள் போல காட்டிக்கொள்வது பகுத்தறிவின் அவலநிலை. 'இம்மானுவேல்' என்பதற்கு தேவன் நம்மோடு இருக்கிறார் என்று அர்த்தம் (மத்-1:23) என்பதைத் தீர்க்கமாய் அறிந்த நமக்கு, 'தேவன் அவருடனே கூட இருந்தபடியினாலே' (அப்-10:38) என்ற அப்போஸ்தலரின் வசனம் புதிய புரிதல் மற்றும் கருத்தை தருகிறது. கட்டப்படாத கடவுளின் வார்த்தைகளை, நமது குறைந்த அறிவின் பகுத்தறிவால் கட்டிப்போட முயலவேண்டாம்.

பாவச் சிறை (பாவம் என்னும் சிறை):

பரிசுத்தமாக வாழவிரும்பும் அனைவரும் அவ்வபோது அடையும் சிறைதான் பாவசிறை. 'எல்லாரும் பாவம்செய்து ஏகமாய் கெட்டுபோனார்கள்' (ரோம-3:12) ஜெகத்துரட்சக னாக 'பாவிகளை இரட்சிக்கும்படியாக கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்' (1தீமோ-1:15) தூய ஆவியின் நிறைவோடும், மகாதேவனின் துணையோடும் அதை நிறைவேற் றினார். 'நன்மைசெய்கிறவராயும்' பாவசிறையில் நம்மைதள்ளும் 'பிசாசின் வல்லமை யில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்' என்று வேதம் கூறுகிறது (அப்-10:38). மற்ற சிறைகளை ஒப்பிடும்போது மிகுந்த வேதனையை தரக்கூடியது இந்த பாவச்சிறைதான். ஏனெனில், 'பாவம்செய்கிற ஆத்துமா சாகும்' 'பாவத்தின் சம்பளம் மரணம்' என்கிறது திருமறை. நமது பரிதாப நிலை என்னவென் றால், நாம் அனைவரும் அந்த சிறையில்தான் இருக்கிறோம் என்பதுதான். எனவேதான் 'பாபிலோன் குமாரத்தியினிடத்தில் குடியிருக்கிற சீயோனே, உன்னை விடுவித்துக் கொள்' (சக-2:7) என்று கடவுள் சொன்னார். நமது பாவநாசர் இயேசு பட்ட காயங்களை நோக்கிப் பார்போம், பாவசிறையிலிருந்து விடுதலை பெறுவோம்.

பாரம்பரிய-சிறை, பகுத்தறிவு-சிறை, பாவ-சிறை போன்ற பலவித சிறைகளில், சிக்கித் தவிக்கும் நம்மை சுகவாசிகளாகவும், சீயோன்-வாசிகளாகவும் வாழ இரட்சகர்-இயேசு அன்போடு அழைக்கிறார். நம்மை முழுமையாய் கிறிஸ்துவுக்கு அர்ப்பணிப்போம். அனைவருக்கும் சுதந்திர திருநாள் நல்வாழ்த்துக்கள். கர்த்தர்தாமே உங்கள் அனைவ ரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில் உங்களுடன்
அருட்திரு. டி. சைமன் சாமுவேல்

அருட்திரு. டி. சைமன் சாமுவேல், ஆயர், சி.எஸ்.ஐ. பொதடூர்பேட்டை குருசேகரம்,
(சென்னைப் பேராயம்), திருவள்ளூர் மாவட்டம், சென்னை, தென்னிந்தியா.

# எமது கைப்பிரதிகள்

## நல்ல விதைகள் – GOOD SEEDS

## நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள்

### Good Tidings Bible-Prints Ministries


கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! சுவிசேஷ ஊழிய பயன்பாட்டுக்காக 20-வகையான கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்துவருகிறோம். சுவிசேஷ ஊழியம் செய்யும் அன்பர்களுக்கும் திருச்சபைகளுக்கும் கைபிரதிகளை இலவசமாய் வழங்குகிறோம். ஒரு வகை கைப்பிரதி வெளியிட ஆகும் செலவு ரூ. 3000/- மட்டும். கைப்பிரதிகளை Sponsor செய்து இயேசுவின் அன்பை அனைத்து மக்களும் அறிந்திட உதவுங்கள். Sponsor செய்ய விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்பு கொள்ளும்படி அன்புடன் அழைக்கிறோம்.

| No.&Title of the Tract | Sponsor's Name |
|---|---|
| 1. மைனாவின் கதை - The story of Myna | - Rev. S.J.D. Dharmaraj, Che-93 |
| 2. வக்கீல் நீதிபதியானார் - Counsel became Judge | - Mr.T. David Manohar, Che-93 |
| 3. மாட்டு உண்ணி - The Cattle Tick | - Mr.R.G. Sutharsingh, Che-93 |
| 4. கர்வமான காகிதப்பட்டம் - The Envious Kite | - Mrs. Rani Samuelraj, Che-93 |
| 5. டிரைவர் இல்லாத ரயில் - A Train without Driver | - Mr. Prasad Samuel, Cud-6 |
| 6. சீரழிக்கும் சீமைக்கருவை - Acacia of fence | - Mr.P.H. Jaychandran, Che-93 |
| 7. குடிநீர் குழாயில் குண்டுத்தவளை - Frog in tap | - Mr.R.C.P. Nixon, Che-93 |
| 8. இளவரசனும் கைதியும் - Prince and the Convict | - Mr.J. Albert, Kumbakonam |
| 9. கடலில் கல்லறைத் தோட்டம் - Bermuda Triangle | - Mr.C. James, Sirkali |
| 10. பற்றியெரியும் மனிதர்கள் - Human Combustion | - Mr.S. Nixon Everbright, AP |
| 11. டைட்டானிக் கப்பல் - The Titanic Ship | - Dr. Sharmila Selvaraj, Cud-1 |
| 12. நாக்குப்பூச்சி - The Tape Worm | - Mr. Arthur Masilamani, Che-7 |
| 13. அதிசய சொட்டு மருந்து - Miracle Drops | - Rev. S.J.D. Dharmaraj, Ch-93 |
| 14. எரியும் முன் எச்சரிக்கை - Warning before death | -Mr.A. Santharaj, Kumbakonam |
| 15. பிணக்குவியலில் இருந்து - From pile of Corpses | - Mr. S.J.P. Raja, Che-126 |
| 16. வெந்நீரில் தவளை - The Frog Experiment | - Mrs. Stella David, Tuticorine |
| 17. கன்கார்டு விமானம் - The Concord Aircraft | - Mr.B. Wilson, Che-92 |
| 18. ஜீன் வால் ஜீன் - Jean Valjean | - Mr. Samson Abraham, Che-93 |
| 19. பெர்லின் சுவர் - The Berlin Wall | - Mr.A. Inbaraj, Kumbakonam |
| 20. மரணத்தின் சாலை - El Camino de la Muerte | |

கைப்பிரதிகளை Sponsor செய்த தேவபிள்ளைகளுக்கு எங்கள் நன்றி. நற்செய்தி கைப்பிரதிகளை எங்களிடம் இலவசமாகப் பெற்று உங்கள் ஊழியங்களில் பயன்படுத்தும்படி அன்புடன் வேண்டுகிறோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமேன்.

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழிய இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள், சென்னை-93. தென்னிந்தியா.

வேத ஆராய்ச்சி - 63



Rev. Dr. D. சுரேஷ் ராஜன்

# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்

Author: Rev. Dr. D. Suresh Rajan

சங்கீதம் – 63

BIBLE RESEARCH CORNER

Episode - 63

முன்னுரை:-

தாவீது யூதாவின் வனாந்திரத்தில் இருக்கையில் பாடின சங்கீதம் என்று இச்சங்கீதத்தின் முகவுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மகிழ்ச்சியான நேரமானாலும் சரி, மனவருத்தத்தின் நேரமானாலும் சரி, தேவனைச் சார்ந்து வாழும் ஒரு மனிதனின் வாழ்வு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்துகிற பாடல் இதுவாகும்.

தாவீது அரசர் தமது மகனாகிய அப்சலோமினாலே விரட்டி யடிக்கப்பட்டு, தனது அரச மேன்மையையும், தனக்கு பிரியமான யாதொன்றையும் அனுபவிக்க முடியாமல், தங்குவதற்கு ஒரு பாதுகாப்பான இடம்கூட இல்லாமல் வேதனையை அனுபவித்துவந்த நாட்களில் தனக்கும் தன் தேவனுக்கும் இடை யிலான உறவு எவ்வளவு மேன்மையானது என்பதை இங்கே விளக்கிக் கூறுகிறார்.

1. தேவனே எனது ஆவல்: (வசனம் 1-4)

நமது வாழ்வில் நாம் அனுபவிக்கும் அனைத்து வேதனையான அனுபவங்களின் நடுவில் நாம் ஆண்டவருக்கு எத்தகைய இடத்தை, எத்தகைய முக்கியத்துவத்தை கொடுக்கவேண்டும் என்பதை இப்பகுதியின் மூலம் தாவீதிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள முடியும். ஒருவேளை குடும்பப் பிரச்சனை காரணமாக நமக்குக் கிடைக்கவேண்டிய வீடு, நிலம் போன்றவற்றை இழந்து நிர்கதியாக நாம் நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் நம்மில் பலர் எப்படி நடந்துகொள்ளுவோம்? எவ்வளவு மன அழுத்தத்திற்குட்பட்டு, எவ்வளவாகப் புலம்பித் தவிப்போம்? எத்தகைய அவிசுவாசமான வார்த்தைகளைப் பேசி கடவுளை நிந்திப்போம்?

ஆனால் தாவீது, கடுமையான தனது வாழ்வின் சூழலிலும் ஆண்டவரை நேசித்து அவர் மீது தனக்கு உள்ள ஆவலை வெளிப்படுத்துவதை இங்கு நாம் பார்க்கிறோம். ‘‘என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது, என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது.’’ (வச-1பி). ‘‘ஜீவனைப் பார்க்கிலும் உமது கிருபை நல்லது, என் உதடுகள் உம்மைத் துதிக்கும்’’ (வச-3) என்று சொல்லி கடவுள் மீதுள்ள தமது அன்பையும் பற்றுறுதியையம் வெளிப்படுத்துவதை இங்கு நாம் பார்க்கிறோம். தேவன் நம்முடைய ஆவலாய் இருக்கிறாரா? என நம்மை நாமே சீர்தூக்கிப் பார்க்க அழைக்கப்படுகிறோம்.

2. தேவனே எனது திருப்தி: (வசனம் 5-7)

தாவீது அரசர் இக்கட்டான சூழ்நிலைகளிலும் கடவுளின் நன்மைகளால் திருப்தி யாய் இருக்கும் அனுபவத்தை இங்கு விவரிப்பதைப் பார்க்கிறோம். ‘‘சுவையான உணவு வகைகளை உண்டதுபோல் நான் திருப்தியடைவேன், மகிழ்ச்சி நிறைந்த உதடுகளுள்ள என் வாய் உம்மைத் துதிக்கும்.’’ (வச-5, பரிசுத்த-பைபிள் மொழிபெயர்ப்பு). நமக்கு எல்லா நன்மைகளும் உண்டாயிருந்து பரிபூரணமாய் இருக்கையில் ‘திருப்தியடைந்திருக்கிறேன்’ என்று கூறுவது இலேசானதாகும். ஆனால், வாழ்வின் விளிம்பில், வருத்தத்துடன் வாழ்ந்துகொண்டிருக்கும் சூழலில் ‘திருப்தியாயுள்ளேன்’ என்று தாவீது கூறுவது மிகவும் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். பல நேரங்களில் நாம் ‘இருப்பதை’ விட்டுவிட்டு ‘பறப்பதைப்’ பிடிக்க நினைக் கிறோம். தேவன் நம் வாழ்வில் செய்த அனேகமான நன்மைகளை நினைத்து மனமகிழ்வுடன் அவருக்கு நன்றி செலுத்தாமல், வேதனையுடனேயே நம் வாழ்வைக் கழித்துக்கொண்டிருக்கிறோம். இக்கட்டான ஒரு சூழ்நிலையில் தாவீது இங்கு, ‘‘நீர் உண்மையாகவே எனக்கு உதவினீர், நீர் என்னை பாதுகாத்ததால் நான் மகிழுகிறேன்.’’ (வச-7, பரிசுத்த-பைபிள்) என்று நன்றியுடன் அறிக்கை யிடுவது நமக்கு ஒரு சவாலாக அமைந்துள்ளது.

அன்பான இறைமக்களே! இன்று நீங்கள் ‘பாலைவன’ அனுபவத்துக்குள்ளாக கடந்து சென்றாலும், தேவன் உங்களை நடத்தின ‘சோலைவன’ அனுபவங்களை நினைத்து, நினைத்து அவரைத் துதித்து அவரில் திருப்தியாய் இருங்கள்.

3. தேவன் என் பாதுகாப்பு: (வசனம் 8-11)

அரச மாளிகையிலிருந்து துரத்திவிடப்பட்ட தாவீதும் அவரைப் பின்சென்றவர்களும் மிகுந்த மனவேதனையிலும், பயத்திலும் இருந்திருக்க வாய்ப்பு உண்டு. எந்த நேரத்திலும் வனாந்தரத்தில் எந்த தீங்கும் ஏற்படும் சூழ்நிலையில் தாவீது கூறும் விசுவாச-வீரவசனங்கள்: ‘‘என் ஆத்துமா உம்மைப் பற்றிக்கொள்கிறது. நீர் என் கைகளைப் பிடித்துக்கொள்கிறீர். சிலர் என்னைக் கொல்ல முயல்கிறார் கள். ஆனால், அவர்கள் அழிக்கப்படுவார்கள்.’’ (வச-8,9மு பரிசுத்த-பைபிள்).

அன்பானவர்களே! இறைவனே நமக்கு எவ்விடத்திலும், எச்சூழ்நிலையிலும் பாதுகாவல். எனவே, நாம் பயமின்றி எந்நிலையிலும் அவரைச் சார்ந்து வாழக் கற்றுக்கொள்ளவேண்டும். ஆண்டவர் தம்மை அண்டி வந்தோரை ஒருபொழுதும் கைவிட்டதாக வரலாறில்லை. அவரே நமக்குக் கேடகமானவர், பாதுகாப்பானவர் என்பதனை உணர்ந்து அவரது கரத்திற்குள் நம்மைக் கையளிப்போமாக.

முடிவுரை: அன்பானவர்களே! ஆண்டவர் மீது ஆவல் கொள்வோம். அவரது வசனத்தைச் சார்ந்து அவரோட நெருங்கியிருப்போம். அவர் நம் வாழ்வில் செய்த நன்மைகளை நினைத்து திருப்தியடைவோம். கடவுளின் பாதுகாப்பு வளையத்திற்கு உள்ளாக இருக்கிறோம் என்ற உறுதியுடன் பயமற்றிருப்போம். கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்...

# வேதாகம போட்டி-141 சரியான பதில் அளித்தோர்

1) அமிர்தகனி CHE
2) அன்பு சுதந்தரம் TIN
3) ஏஞ்சல் சி. TIN
4) ஏஞ்சல் ராஜதுரை CHE
5) ஏஞ்சலின் பிரியா ஏ. TIN
6) ஏஞ்சலின் வில்லியம்ஸ் CHE
7) அரோமா சாத்ராக் TIN
8) ஆர்தர் மாசில்லாமணி CHE
9) அருள்செல்வி VIR
10) அருள்செல்வி ஜாண்ஸன் TIN
11) பெல்சி தங்கராஜ் CHE
12) பெனிட்டா பிராங்க்ளின் CHE
13) பியூலா அலெக்ஸ் CHE
14) பெட்டி பிரின்ஸ் CHE
15) செலினா பென்சி வில்சன் DR, CHE
16) சந்திராபாய் மாசிலாமணி AVD
17) சந்திரலேகா KAL
18) சந்திரா சாமுவேல் TIN
19) சார்லட் டேவிட் CHE
20) சார்லஸ் ஃபின்னி DR. CHE
21) சிட்டி NOC
22) கிறிஸ்டல் ஜாய் யோபு TPT
23) கிறிஸ்துதாஸ் GOP
24) கிறிஸ்டி ஆயிட்டஸ் TIN
25) கிறிஸ்டி ஞானராஜ் CHE
26) சிசிலி புஷ்பம் டேவிட் CHE
27) டேனியல் தாமஸ் TIN
28) டேனிங் சொர்ணா ஜெஸ் TIN
29) டேவிட் ஜே.ஆர். CHE/CBE
30) தெபோராள் ஆனந்தமணி CNG
31) டெல்பி பாத்திமா CHE
32) தேவமணி ஆபிரகாம் TUT
33) தேவநேசம் ராஜாசிங் CHE
34) டோராபாய் CHE
35) எஸ்தர் D.R. TIN
36) எவாஞ்சலின் கிப்சன் MSK
37) எவாஞ்சலின் ஜோன்ஸ் DR. SLM
38) ஃபிரீடா லிவிங்ஸ்டன் WBD
39) குளோரா BBC BD TEN
40) ஞானம் ஜெபராஜ் TIN
41) ஞானம் பிலிப் CBE
42) ஞானராணி G. PAN
43) ஞானசெல்வி மோசஸ் CHE
44) கிரேஸ் டேனி PCM
45) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் CHE
46) கிரேஸியா ஜெயபால் CHE
47) கிரிசெல்டா செய்லர் CHE
48) ஹெலன் ஜான்சிராணி TIN
49) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் CHE
50) ஹெலன் திலக் TUT
51) ஹேமா அஜீத் CHE
52) ஹேமா கேப்ரியேல் MUM
53) ஹிம்லா ராஜகுமாரி CHE
54) இளவரசி ஜோபிதா CBE
55) இன்பவல்லி கலைச்செல்வன் MDU
56) இந்திரா கெத்ஸி டேவிட் TIN
57) ஜமீலா செல்வராஜ் CHE
58) ஜேன்ஸ் ANM
59) ஜேன் தர்மராஜ் TIN
60) ஜான்ஸி சந்தியா MAR
61) ஜாஸ்மின் ஞானதாஸ் CHE
62) ஜெயகுமாரி CBE
63) ஜெபக்குட்டி மோசஸ் TIN
64) ஜெபசீலி கிளின்டன் CHE
65) ஜெபஸ்டின் ஜி. KNR
66) ஜெபா சீனி MKM
67) ஜெமீலா நிக்ஸன் CHE
68) ஜெனித்தா செல்வின் TIN
69) ஜெரின் ஸ்டீபன் CHE
70) ஜெஸி செல்லதுரை CBE
71) ஜெஸி ஜெயக்குமார் TIN
72) ஜெயா ஆல்பர்ட் KUM
73) ஜெயா மங்களம் TIN
74) ஜெயபால் D. ARM
75) ஜோனா ஸ்டீபன் AVD
76) ஜோஸ்பின் ஜெஸி CHE
77) ஜாய்ஸ் பாண்டியன் CHE
78) ஜூலியட் CHE
79) ஜூலியட் ஜெயக்குமார் TIN
80) கலா கிருபாகரன் TIN
81) கலையரசி செல்வராஜ் CHE
82) கஸ்தூரி எலியாஸ் TIN
83) கிருபா சாந்தி AV. CHE
84) கோயில்பிள்ளை ஞானத்தாய் APM

## வேதாகம போட்டி-141 சரியான பதில் அளித்தோர் பட்டியலின் தொடர்ச்சி

85) லதா மைக்கேல்ராஜ் CHE
86) லீலா டேவிட் CHE
87) லீலா ஜெபராஜ் THA
88) லீலா ஜோஸப் CBE
89) லில்லி ஜாண்ஸன் CHE
90) லிஸி டென்சிங் TIN
91) மல்லிகா V. CHE
92) மல்லிகா ஜாய்ஸ் TCY
93) மணிமேகலை ஜெயக்குமார் TIN
94) மனோகரம் தனராஜ் NAZ
95) மரியாள் JS TUT
96) மரிய பாப்பா CHE
97) மேரி தேவதாஸ் MDU
98) மெஜிலா ஜோஷ்வா TUT
99) மெர்சிபா CBE
100) மெர்சி தனராஜ் CBE
101) மெரிட்டா ஜெயபாலன் TCY
102) மியூரியல் புஷ்பராஜ் CHE
103) நிக்ஸன் எவர்பிரைட் TIN
104) ஆலிவ் ஜெயபாலன் CBE
105) பாக்யபாய் ஆரோன் TIN
106) பால் தங்கம் CHE
107) பமீலா எட்வின் KAN
108) பெர்சி பால் பொன்சிங் SAW
109) பிங்க்லின் தேவமலர் CHE
110) பிரேமா பூபாலன் AVD
111) பிரேமா ஸ்டாலின் CHE
112) பிரின்ஸ் தயாநிதி CHE
113) பிரிசில்லா தாஸ் CHE
114) பிரிஸ்கில்லாள் சசி CBE
115) ரேச்சல் ஈஸ்டர் VEL
116) ராஜபிரமிளா TPT
117) ராஜ்மேரி சார்லஸ் KER
118) ரமோலா அதிசயராஜ் TIN
119) ராணி பிரபாகரன் TIN
120) ராணி சாமுவேல்ராஜ் CHE
121) ரத்னா டென்னிஸன் CBE
122) ரத்னாவதி பாண்டியன் CHE
123) ரெஜினா விக்டர் TIN
124) ரோஸ்லின் மார்கிரெட் CHE
125) ரோஸி ஸ்டீபன் CHE
126) ரூபவதி நோபிள் TIN
127) ரூபி ஜாண் நாடார் MUM
128) ரூபி ஜாண்ஸன் TIN
129) ரூத் ஜாண்ஸன் TIN
130) சாமுவேல் டேவிட் TPT
131) சாரா பாலசிங் MDU
132) சரோஜா பாக்யசீலி பர்னபாஸ் MSK
133) சரோஜினி எலிசபெத் CHE
134) செல்வ அமுதா ஜார்ஜ் CHE
135) செல்வ பென்சி ஆபேல் AP
136) செல்வராணி ஆல்பர்ட் CHE
137) செல்வராணி G CHE
138) செல்வி அமிர்தராஜ் CHE
139) ஷாலி எடிசன் CHE
140) சாந்தி ஆல்பர்ட் PCM
141) சாந்தி ஜெபக்கனி KAL
142) சாந்தி ரோஸ் CBE
143) ஷர்மிளா செல்வராஜ்.DR. CUD
144) ஷீபா சாம்ஸன் CHE
145) ஷீலா சாமுவேல் CUD
146) ஷெரீன் ஜெபராஜ் PAN
147) சவுந்தரம் சாலமோன் CHE
148) ஸ்டெல்லா டேவிட் TUT
149) ஸ்டெல்லா கனகராஜ் CHE
150) ஸ்டெல்லா சூசையய்யா TUT
151) சுகிர்தா ஆல்வின் CHE
152) சுகிர்தா சின்னதுரை TIN
153) சுஜாதா சாமுவேல் CHE
154) சுமித்ரா B. CHE
155) சுந்தரிபாய் K. TUT
156) சுசீலா தியோடர் TCY
157) சுவர்ணலதா அற்புதராஜ் CHE
158) தாரா மாணிக்கம் CHE
159) தெல்மா ஸ்டேன்லி MDU
160) வனஜா ஹெர்பர்ட் TIN
161) வசந்தா அன்பன் TIN
162) வசந்தி கருணாகரன் CHE
163) வசந்தி வாசன் CHE
164) விஜயராணி A. CHE
165) விஜி டேனியல் CHE
166) விமலா ஜெயக்குமார் TUT
167) விமல் மேரி திரவியராஜ் MSK
168) வினோலியா ஜேம்ஸ் KPT
169) வைலட் கிறிஸ்டோபர் TIN
170) வைலட் சைரஸ் CHE
171) வெஸ்லி சாமுவேல் TUT

PRAYER-WINDOW  PRAYER-WINDOW

ஜெப-ஜன்னல் ஜெப-ஜன்னல்

## ஜெப–ஜன்னல் ஜெப நேரங்கள் ஆகஸ்டு – 2022

| | |
|---|---|
| **ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்** | நாள்: 12–08–2022 இரண்டாம் வெள்ளி<br>நேரம்: காலை 5முதல் 6மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்** | நாள்: 19–08–2022 மூன்றாம் வெள்ளி<br>நேரம்: மதியம் 1முதல் 2மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்** | நாள்: 26–08–2022 நான்காம் வெள்ளி<br>நேரம்: இரவு 8முதல் 10மணி வரை. |

பிரியமானவர்களே! இந்த ஜெப–ஜன்னல் ஜெப–நேரங்களில் தானி–6:10 வசனத்தின்படி **"தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க"** ஜெபித்ததைப்போல் நமது இயக்குநரும், ஜெப–ஜன்னல் ஜெப–வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக்கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

---

# திருச்சபை வரலாறு

**2000ஆண்டு வரலாறு 2ம் வருகைக்குத் தயாராகு**

## History of Christianity In India from 1st to 21 Century

**கடந்த மாத இதழில்**
**ஆரம்பம் ஆனது**
**பக்கம் 16ல்**

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு
(1முதல் 21ம் நூற்றாண்டு வரை)

## புதிய கட்டுரைத் தொடர்

கடந்ததமாத இதழில் ஆரம்பமானது.

(பக்கம் 16 பார்க்கவும்)

**கட்டுரை ஆசிரியர்**
**அறிவர். திருமதி. சலோமி மனோகர்**
ஓய்வுவெற்ற உதவிப் பேராசிரியை, தூய. போப் கல்லூரி சாயர்புரம், தூத்துக்குடி மாவட்டம்.

படித்துப் பயனடைவீர்!! ஆசீர்வாதம் பெறுவீர்!!

# வேதாகம போட்டி-142

வேதபகுதி சங்கீதம் 1முதல்-50வரை

ஓரிரு வார்த்தைகளில் பதிலளிக்கவேண்டும்

பதில்களுடன் வேதவசன இருப்பிடம் எழுதவேண்டும்

பதிலளிக்க கடைசி நாள் ஆகஸ்டு-25

1. மண் குகையில் 7-முறை உருக்கி புடமிட்ட வெள்ளி போன்றது எது?
2. கடல்களுக்கு மேல் அஸ்திபாரம், நதிகளுக்கு மேல் ஸ்தாபிதம் உடையது எது?
3. காற்று பறக்கடிக்கும் பதரைப்போல் இருக்கிறவர்கள் யார்?
4. தர்ஷீசின் கப்பல்களை கர்த்தர் எதினால் உடைப்பதாக சங்கீதக்காரர் சொல்கிறார்?
5. கர்த்தருடைய இரகசியம் யாரிடத்தில் இருக்கிறது?
6. கட்டுகளை அறுத்து கயிறுகளை நம்மைவிட்டு எறிந்துபோடுவோம் என்றவர்கள் யார்?
7. கனம் பொருந்தியவனாயிருந்தும் அறிவில்லா மனுஷன் எதற்கு ஒப்பாய் இருக்கிறான்?
8. தாங்கள் வெட்டின குழியில் தாங்களே விழுந்தார்கள் - இவர்கள் யார்?
9. ஆபத்துக்காலத்தில் வெட்கப்பட்டுபோகாதிருந்து பஞ்சகாலத்தில் திருப்தியடைவது யார்?
10. கர்த்தர் பகற்காலத்திலே எதைக் கட்டளையிடுகிறார்?
11. கர்த்தர் நல்லவரும் உத்தமருமாய் இருப்பதால் யாருக்கு வழியை தெரிவிக்கிறார்?
12. வடிப்பமான ஸ்தானமும் சர்வபூமியின் மகிழ்ச்சியுமாய் இருக்கிறது எது?
13. கர்த்தர் வசனித்து கிழக்கு தொடங்கி மேற்கு வரைக்குமுள்ள எதைக் கூப்பிடுகிறார்?
14. கர்த்தர் யாரை ஆசீர்வதித்து, காருண்யம் எனும் கேடகத்தால் சூழ்ந்துகொள்வார்?
15. யார் மனந்திரும்பாவிட்டால் தேவன் தமது பட்டயத்தைக் கருக்காக்குவார்?
16. கர்த்தருடைய காருணியத்தினால் நிறைந்திருக்கிறது எது?
17. தன் பெருமையினால் சிறுமைப்பட்டவனை கடூரமாய் துன்பப்படுத்துகிறவன் யார்?
18. பெண் மான்களை ஈனும்படி செய்து காடுகளை வெளியாக்குவது எது?
19. உன்னதமானவர் வாசம்பண்ணும் பரிசுத்த ஸ்தலத்தை சந்தோஷிப்பிப்பது எது?
20. கர்த்தருடைய கண்கள் யார் மேல் நோக்கமாய் இருக்கிறது?

**வேதாகம போட்டிக்கான பதில்களை அனுப்பவேண்டிய முகவரி**

திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A, பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463

**ADDRESS FOR SENDING ANSWERS OF BIBLE CONTEST**

Mrs. Jeyaseeli Dharmaraja, Flat: F-1, First floor, Bharathi flats, No: 4/2-A, Bharathi Street, Gandhinagar, Saligramam, Chennai-93.
E-mail: ratchippu@hotmail.com/siddharmaraja@gmail.com. Whatsapp: 9789914463



சகோ. C. ஏஞ்சல்

# கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

THE NAME OF THE GOD OF JACOB SHEM ELOHEI YAAKOV

## யாக்கோபின் தேவன் என்னும் நாமம்

EPISODE - 39 ஷெம் ஏலோஹெய் யாக்கோவ் பாகம் - 39

யாக்கோபின் தேவனுடைய நாமம் உமக்கு உயர்ந்த அடைக்கலமாவதாக.
சங்கீதம்-20:1பி
The name of the God of Jacob defend thee. Psalm-20:1b

யாக்கோபை தமக்காகத் தெரிந்துகொண்ட யாக்கோபின் தேவன் என்னும் நாமத்தில் இரட்சிப்பின் விசுவாசிகளுக்கு சுதந்திர-மாத நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

சங்-24:6,5 கர்த்தருடைய சமூகத்தை நாடுகிற யாக்கோபு என்னும் சந்ததியான நீங்கள் கர்த்தரால் ஆசீர்வாதத்தையும், இரட்சிப்பின் தேவனால் நீதியையும் பெறுவீர்கள். அதிகாலை வேளையில் அவர் முகத்தை நாடி அவரது வல்லமையால் நிரம்ப, ஆசீர்வாதத்தின் ஊற்றானவர், யாக்கோபை இஸ்ரவேலாக்கி ஆசீர்வதித்தவர், யாக்கோபின் 12கோத்திரங் களின் நாமத்தை (வெளி 21:14) எருசலேமின் நாமத்தில் எழுதின தேவன், நம்மையும் ஆயிரம் வருட அரசாட்சியில் அவரோடு ஆளுகை செய்யும்படிக்கு உயர்த்துவார்.

ஏசாயா-45:19 நான் யாரும் இல்லாத அந்தரங்கமான இடத்தில் பேசினதில்லை. விருதாவாக என்னைத் தேடுங்கள் என்று யாக்கோபின் சந்ததிக்குச் சொன்னதுமில்லை. நான் நீதியைப் பேசி யதார்த்தமானவைகளை அறிவிக்கிற தேவன் என்கிறார்.

ஏசாயா-48:12 யாக்கோபே நான் அழைத்திருக்கிற இஸ்ரவேலே எனக்குச் செவிகொடு என்று கர்த்தர் நம்மைப்பார்த்துச் சொல்லுகிறார்.

எண்-23:23, ஏசாயா-49:26 கர்த்தருடைய ஆவியானவர் நம்மை ஆளுகை செய்வதால், அவரே சத்துருவின் கையிலுள்ள ஆயுதங்களை சுட்டெரிக்கிறார், பார்வோனை மேற்கொள்ளுகிற வல்லமையைத் தருகிறார். உனக்கு எதிரான மந்திரவாதம் குறிசொல்லுதல் இந்த உலகில் இல்லை என்கிறார்.

எண்-24:5,6 யாக்கோபே, உன் கூடாரங்கள் பரவிப்போகிற ஆறுகளைப்போலவும், நதியோரத்திலுள்ள தோட்டங்களைப்போலவும், கர்த்தர் நாட்டின சந்தன மரங்களைப் போலவும், தண்ணீர் அருகே உள்ள கேதுரு மரங்களைப்போலவும் இருக்கிறது என்கிறார்.

ஜெபம்: யாக்கோபின் தேவனே உம்மைத் துதிக்கிறோம். ஸ்தோத்தரிக்கிறோம். எங்கள் திருச்சபை, எங்கள் இல்லத்தை வானத்தில் வாசல் ஆக்குவீராக. யாக்கோபை ஆசீர்வதித்த கரம் எங்கள் சிரசின் மீது அமர்வதாக. நீர் எங்களுக்குத்தரும் யாவற்றிலும் உமக்கு தசமபாகம் செலுத்துவோம். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் அன்பின் பிதாவே. ஆமென்.

கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பு சகோதரி
**C. Angel**

தொகுப்பு: சகோதரி. C. ஏஞ்சல் B.Sc, திருநெல்வேலி, தென்னிந்தியா

தேன்துளி வேதவசனக் கதை–135*. . .

# தேவனிடத்தில் அன்புகூறுகிறவர்களுக்கு நடப்பதெல்லாம் நன்மைக்கே



சகோ. அசரியா

சகோ. M. அசரியா ஞானதாஸ் M.A. M.Ed.

ஒரு சிறு கிராமத்தில் எஸ்தர் என்னும் தேவபக்தியுள்ள சகோதரி குடும்பத்துடன் வாழ்ந்து வந்தார்கள். அவர்களது கிராமத்திலே ஞாயிற்றுக்கிழமை ஆலய ஆராதனை மதியம் 12மணிக்கு நடைபெறுவது வழக்கம். உணவு வகைகளை சுவையாக சமைக்கும் திறமை படைத்த அந்த சகோதரி, ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று ஆராதனைக்கு முன்பு ருசிகரமான கோழி குழம்பு தயார்செய்து வைத்துவிட்டு, ஆலய ஆராதனை முடிந்தவுடன் குடும்பத்துடன் அதை சாப்பிடலாம் என்ற தீர்மானத்துடன், குடும்பமாக ஆலயம் சென்று ஆராதனையில் பங்குபெற்றார்கள். பாடல்கள், துதி-ஆராதனை, ஆவிக்குரிய தேவசெய்தி, ஜெப-வேளை என எல்லாவற்றிலும் முழுமையாக பங்குபெற்று கருத்தான ஜெபத்தோடு வீடுதிரும்பினார்கள்.

சற்று நேரத்தில் மதிய உணவிற்கான நேரம் வந்தது. அவர்கள் அன்புடனும் மகிழ்ச்சி யுடனும் தன் குடும்பத்தினருக்கு உணவு வகைகளையும் கோழி-குழம்பையும் பரிமாற தயாராகிக் கொண்டிருக்கும்போது திடீரென ஒரு பூனை குறுக்கே பாய்ந்து கோழி-குழம்பு இருந்த மண் சட்டியை தரையில் தள்ளிவிட, மண்-சட்டி தரையில் விழுந்து உடைந்தது, கோழி-குழம்பும் தரையில் சிந்தி வீணாகிவிட்டது. ஆவலுடன் கோழி-குழம்பு சாப்பாட்டை சாப்பிட தயாரான சகோதரியும் அவர்களது குடும்பத்தினரும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தனர்.

சகோதரியும், ‘ஏன் இப்படி ஆயிற்று?’ என எண்ணிக்கொண்டே உடைந்த மண்சட்டியையும் வீணான கோழி குழம்பையும் அப்புறப்படுத்த முயன்றபோது கண்ட காட்சி அனைவரையும் திகைக்கவைத்தது. அது என்ன தெரியுமா? உடைந்த மண்சட்டிக்குள் செத்துக்கிடந்த ஒரு ராட்சத விஷ-பல்லிதான். திகைப்பிலிருந்து மீண்ட அவர்கள் அனைவரும் உடனே குடும்பமாக முழங்கால்படியிட்டு ஜெபம் பண்ணி, வரவிருந்த பெரிய ஆபத்திலிருந்தும், மரண பய நிலைகளிலிருந்தும் பாதுகாத்த இயேசுவுக்கு நன்றி செலுத்தினர். தொடர்ந்து இதை சாட்சியாய் அறிவித்து, கிறிஸ்துவுக்கு சிறந்த சாட்சிகளாக வாழ்ந்து, அனேகரை இயேசு இரட்சகரிடம் வழிநடத்தும் ஊழியக்காரராய் மாறினார்கள்.

பிரிய விசுவாசிகளே! தேவனிடத்தில் அன்புகூறுகிற பிள்ளைகளாகிய நம் வாழ்வில் விரும்பிய காரியங்கள் நடைபெறாதபோதும், நாம் விரும்பாத காரியங்கள் நடைபெறும்போதும், எல்லாவற்றையும் நம் ஆண்டவர் நன்மைக் காகவே நடத்துவார் என விசுவாசித்து நம்மை அவருடைய சித்தத் துக்கு ஒப்புக்கொடுப்போம். வேதம் இவ்விதமாகச் சொல்லுகிறது:

தேவனிடத்தில் அன்புகூறுகிறவர்களுக்குச் சகலமும் நம்மைக்கு ஏதுவாக நடக்கிறது. ரோமர்–8:28

உத்தமர்கள் ஆபத்துக்காலத்திலே வெட்கப்பட்டுப்போவதில்லை. சங்–37:19

என் ஆபத்து நாளில் கர்த்தர் எனக்கு ஆதரவாயிருந்தார். சங்–18:18

தேவன் ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர். சங்–46:1

EPISODE

1

# இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு

1ம் நூற்றாண்டு முதல் 21ம் நூற்றாண்டு வரை

## இரண்டாயிரம் ஆண்டு வரலாறு..
## இரண்டாம் வருகைக்கு தயாராகு...

கட்டுரை ஆசிரியர்
அறிவர். திருமதி. சலோமி மனோகர்



**இந்திய திருச்சபை சரிதை:**
**(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)**
**தொகுதி-1 பகுதி-1**

1. இந்தியாவில் கிறிஸ்தவத்தின் தொடக்கம்:-

1.தாமஸ் பாரம்பரியமும் தென்னிந்தியாவும்:

கிறிஸ்தவ மார்க்க வளர்ச்சியின் முதல் கட்டமாக அப்போஸ்தலர்களின் போதனைகளைக் குறிப்பிடலாம். இயேசுவின் வாழ்க்கை, அவரது போதனைகள், இயேசுவின் உயிர்த்தெழுதல், அவரது தெய்வீகம், அவரது இரண்டாம் வருகை ஆகியவற்றின் மீதான நம்பிக்கையை அடிப்படை யாகக்கொண்டே அருட்பணி நடந்தது. ஆதிக்-கிறிஸ்தவர்கள், தங்களை வெறுத்து துன்புறுத்தியவர்களை வெறுக்காமல் அவர்களை மன்னித்து அவர்கட்காய் ஜெபித்தார்கள்.

இயேசு கிறிஸ்துவின் 12 அப்போஸ்தலர்களில் ஒருவரான தோமா இந்தியாவிற்கு வந்தது முதல் இந்தியாவில் கிறிஸ்தவம் ஆரம்பமானது. இந்தியாவில் கிறிஸ்தவம் மூன்றாவது பெரிய மார்க்கமாக, 27.8 மில்லியன் அங்கத்தினருடன் இந்திய மக்கள் தொகையில் சுமார் 2.3 சதவீதமாகவுள்ளது. கி.பி.52-ல் கேரளாவிலுள்ள மலபார் கடற்கரையில் இயேசுவின் சீடரான அப்போஸ்தலர் தோமா வந்து இறங்கினார் என வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. தமிழகத்தின் முசிறி துறைமுகத்தை கி.பி 52ல் வந்தடைந்தார் என்று மற்றொரு பாரம்பரிய செய்தி உண்டு. கி.பி 52-ல் ஒரு தச்சராக இருந்த புனித தோமா, கேரளாவின் கொடுங்கல்லூரில், பஞ்சாபின் இந்தோ-பார்த்தியன் அரசர் கோண்டோ பேரஸுக்கு ஒரு அரண்மனையைக் கட்ட முன்வந்திருக்கிறார். தோமாவின் தொடர்பில் அவ்வரசரின் மகளும் அவரது புது-மணமகனும் கிறிஸ்தவர்களாக மாறினர்.

புனித தோமா கி.பி 52-ல் சிலருக்கு திருமுழுக்கு அளித்து, தோமா கிறிஸ்தவர்கள் எனப்படும் கிறிஸ்தவ சமூகத்தைத் தோற்றுவித்தார் என்றும் அப்பகுதியில் 7-சபைகளை நிறுவி (கொடுங்கல்லூர், கொல்லம், நிரணம், நிலைக்கல், கொக்கமங்கலம், கோட்டக் காயல், பழையூர்) அச்சபைகளுக்கு மூப்பர்களை நியமித்தார் என்றும் பாரம்பரியம் கூறுகிறது. கிழக்குக் கடற்கரை பகுதியிலும் சில சபைகளை நிறுவியுள்ளார். இந்த ஏழு ஆலயங்களை நிறுவியதே தெற்கு ஆசியாவில் கிறிஸ்தவத்தின் தொடக்கம் ஆகியது.

சிரியா-மலபார்-நஸ்ரானி மக்கள் கேரளாவில் உள்ள ஒரு சமூகத்தை பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர். அவர்களது பாரம்பரியம் கேரள பூர்வ-குடிகள் மற்றும் இடம் பெயர்ந்த யூதர்கள் மத்தியிலும் காணப்படுகிறது. தோமாவால் நிறுவப்பட்ட ஏழு திருச்சபைகளிலும் இப்பாரம்பரியம் நீடிக்கிறது. அவர்கள் ஒரு தனித்துவமான ஹீப்ரு-சிரியாக்-கிறிஸ்தவ பாரம்பரியத்தைப் உடையவர்கள். இதில் யூத பழக்க வழக்கங்களும் சில இந்து கூறுகளும் அடங்கும். அவர்களின் பாரம்பரியம் சிரியாக்-கேரளம். அவர்களின் கலாச்சாரம் தென்னிந்திய கலாச்சாரம். புனித தாமஸின் சட்டங்களின்படி, இந்தியாவில் முதலாவதாக கிறிஸ்தவ மார்க்கத்தை ஏற்றவர்கள் மலபாரி-யூதர்கள் ஆவர். அவர்கள் இஸ்ரேலின் மன்னர் சாலமோன் காலம்தொட்டு (கி.மு.1000) கேரளாவில் குடியேறியிருந்தவர்களே.

திருவிதாங்கோடு (அறப்பள்ளி) ஆலயம் தமிழ்நாட்டின் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மணிக்கிராமம் என்ற ஊரில் அமைந்துள்ளது. இந்த ஆலயம் புனித தோமாவால் கிபி 1-ம் நூற்றாண்டில் மன்னன் உதயஞ்சேரலாதன் காலத்தில் கட்டப்பட்டதாகக் கருதப் படுகிறது. இது தோமையர் கோவில் என்று அழைக்கப்படுகிறது. கிழக்கத்திய மலங்கரா சிரியன் கத்தோலிக்க திருச்சபையானது, தனது ஆளுகைக்குட்பட்ட இக்கோவிலை டிசம்பர் 16, 2007 அன்று புனித தோமா சர்வதேச வழிபாட்டு நிலையமாக அறிவித்துள்ளது.

இந்திய திருச்சபைகள் சிரியாவின் மேற்பார்வையில் இருந்தன. தாமஸ் பாரம்பரிய இந்திய சபைகளுக்கான பிஷப்களை அந்தியோகியா திருச்சபைதான் (கிழக்கத்திய கத்தோலிக்க சபை) நியமித்தது. கிறிஸ்தவ மார்க்கம் இந்தியாவில் 1-ம் நூற்றாண்டிலேயே நுழைந்திருந்தும் சுமார் 18-நூற்றாண்டுகளாக மலபார் பகுதிக்கு வெளியே ஒரு பேரியக்க மாக எழுச்சி பெறவில்லை. மாறாக, 19-ம் நூற்றாண்டிற்குப் பின்னரே விரிவடைந்துள்ளது.

இன்று கேரளாவில் 3-வகையான கிறிஸ்தவர்கள் இருக்கின்றார்கள். முதல் வகையினர் போப்பாண்டவரை தங்கள் ஆன்மீகத் தலைவராக ஏற்றுக்கொண்ட ரோமன் கத்தோலிக்கர் கள். இவர்கள் லத்தீன்-லிட்டர்ஜி, சீரோ-மலபார் மற்றும் சீரோ-மலங்கரா வழிபாடுகளை பின்பற்றுகிறார்கள். 2-ம் பிரிவினர், போப்பாண்டவரை தங்கள் தலைவராக ஏற்றுக் கொள்ளாத சிஸ்மாட்டிக்ஸ். இவர்கள் சிரியன் வழிபாட்டு முறையைப் பின்பற்றுகிறார்கள். இவர்கள் ஜேக்கோபைட்ஸ், மார்த்தோமைட்ஸ், நஸ்ரானியன்ஸ் என்றும் அழைக்கப் படுகிறார்கள். 3-ம் பிரிவினர், தங்களை சிரியன் கிறிஸ்தவர்கள் (Syrian Christians) என்று அழைத்துக்கொள்ளும் மலபார் பகுதியிலுள்ள கிறிஸ்தவர்கள்.

புனித தோமா இந்தியாவில் சுமார் 17-வருடங்கள் அருட்பணி செய்துள்ளார். தற்போதைய தமிழ்நாட்டின் சென்னை பகுதியில் ஊழியம் செய்த நாட்களில் (கி.பி.72) அவர்மேல் பொறாமை கொண்ட பிராமணர்கள் அவரை ஈட்டியால் குத்தி கொன்றனர். அந்த இடம் இன்று தூய. தோமையர் மலை (St.Thomas Mount) என அழைக்கப்படுகிறது. சென்னையிலுள்ள மைலாப்பூரில் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. சென்னை சாந்தோம் தேவாலயம் புனித தோமாவின் கல்லறை இருந்ததாகக் கருதப்படும் இடத்தின் மேல் கட்டப்பட்டது. பல நூற்றாண்டுகளாக தாமஸ் பாரம்பரிய கிறிஸ்தவர்களின் முக்கிய மையமாக தென்னிந்தியாவின் கேரளா மற்றும் தமிழ்நாடு விளங்குவதாக வரலாறு குறிப்பிடுகிறது.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்...

Author: Dr. Mrs. Salomi Manohar, Asst. Professor Rtd.,
(Pope’s College Sawerpuram), Thiruvanmiyur, Chennai. South India

# ஜெப-ஜன்னல் நன்றி-பலிகள்

**கர்த்தரை நோக்கி மன்றாடி ஜெபிப்போம் - Come! Let us intercede to God**

1) அகில உலக மக்களின் சுக வாழ்வுக்காக... உக்ரைன் போர் மற்றும் இலங்கை, பாக்கிஸ்தான், ஆப்கானிஸ்தான் நாடுகளில் பொருளாதார சீர்கேடு - மக்கள் போராட்டம் முடிவுக்கு வர... பெருந்தொற்று, புயல்-மழை, காட்டுத் தீ போன்ற இயற்கை பேரிடர்களி லிருந்தும் பிரிவினைவாதம் - பயங்கரவாதங்களிலிருந்தும் மக்கள் பாதுகாக்கப்பட...

2) இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... இந்திய பொருளாதாரம் சீரடைய... ஒன்றிய அரசு மாநிலங்களை சமமாக பாவித்து நடத்த... விலைவாசிகள் குறைய... மாநிலங்களுக்கும் சேர வேண்டிய நிலுவைத் தொகை மற்றும் இழப்பீட்டு நிதியை ஒன்றிய அரசு எந்த பாரபட்சமின்றி வழங்க... புதிய குடியரசுத் தலைவருக்காக...

3) தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக... கொரோனா மற்றம் குரங்கு அம்மை தொற்றுக்கள் கட்டுப்படுத்தப்பட... தமிழக மக்கள் அனைவரும் இன-மத-மொழி வேறுபாடின்றி வாழ... தமிழ்நாட்டில் விவசாயம் மற்றும் தொழில்கள், வியாபாரம் சிறக்க... தமிழ்நாட்டு மீனவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட.... புயல் -மழை - வெள்ளம் - கொரோனா பாதிப்புகளிலிருந்து மக்கள் மீண்டுவர...

4) திருமதி.மெர்லின்,திருமதி.பாக்கியா, திருமதி.திலகவதி மகேஷ்,திருமதி. வைலட், திருதி.சுதா திருமதி.பிரியா சுதிர், திருமதி.புஷ்பாவதி, திருமதி.ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

5) உயர் கல்வி பயின்றுவரும் நம் பிள்ளைகள் கி.ஃப்சன் தங்கராஜ், பிரின்ஸ் ஜேக்கப், ஜாஷ்வா மேத்யூ, ஷெர்லி ஜூடியா, டிரிசியா லவ்ஸ்லி, ஜாய்ஸ் கிறிஸ்டினா, ஜோ.ஃப்னா, ஜெனிபர், கி.ஃப்ட்லின், ஜோயின்ஸ், ஜான்ஸி ப்ளோரா, ஜெஸிக்கா, சிந்தியா பிரகாஷ், ஆகியோருக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

6) திருமதி. ஃபிளாரன்ஸ் ராஜமணி, திரு. பி.ஹெச். ஜெயச்சந்திரன், திருமதி. ஈவ்லின்சிப்பெர், திருமதி. எபனேசர், திரு. சாம் எலியேசர், திருமதி. லீலா மனோகர சிங், திரு.அசரியா ஞானதாஸ், திரு.பிலிப், திருமதி.ஞானரத்தின பாய், திருமதி.தங்கம் ஜோன்ஸ்,திருமதி. மேரி கிரேஸ் ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

7) திருமதி. சுந்தரிபாய், திருமதி.குளோரி ஜெயபால், திருமதி.மேரி தேவதாஸ், திருமதி. ஜரீன் வாக்கர், திருமதி.வசந்தா அன்பன், திருமதி.வனஜா ஹெர்பர்ட், திருமதி. மங்களராணி ஞானப்பிரகாசம், திருமதி.கிரெடா ஐசக், திருமதி.ஹேமலதா ராஜமணி, திருமதி. சார்லெட் டேவிட், திருமதி. ரத்னாபாய் சாம், திருமதி. அலீஸ் ரெஜினாபாய், திரு. அப்பன் டேவிட் ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

8) நமது ஊழிய ஆதரவாளர்களான திருமதி. அரோமா சாத்ராக், திரு. சாம்சன் ஆபிரகாம், திருமதி. நிறைமதி ஜாண்ஸன், திரு.எஸ்.ஜே.பி. ராஜா, திரு.நிக்ஸன் எவர்பிரைட், திரு. பி.ஹெச். ஜெயச்சந்திரன், திரு. அசரியா ஞானதாஸ் ஆகியோருக்காக...அவர்களுடைய குடும்பத்துக்காக...

9) ஆண்டிறுதித் தேர்வில் விரும்பிய முடிவுகள் கிடைக்காத, வெற்றியை தவறவிட்ட நம் பிள்ளைகள் கர்த்தரின் தைரியத்தைப் பெற்று ஜெபத்துடன் சிறந்த வெற்றியை அடைய...

10) திருமதி. மெர்லின், திருமதி. கவுலின், திருமதி. லெஷ்மி ஆகியோரின் சுகத்துக்காக... சுக பிரசவத்திற்காக...

# வேதாகம போட்டி-141 (யோபு)

## சரியான விடைகள்

1. உறைந்த மழையை யோபு:-24:19
2. புத்தியில்லா மனுஷன யோபு:-11:12
3. எலிகூ யோபு:-32:7
4. பூமி யோபு:-38:14
5. ஞானம் புத்தி யோபு:-12:12
6. மண், கற்களில் யோபு:-28:2
7. தீக்குருவிகள் யோபு:-39:17
8. எலிகூ யோபு:-32:2
9. யோபுவின் மனைவி யோபு:-2:9
10. தண்ணீர்-ஜலபிரவாகம் யோபு:-14:19
11. யோபு யோபு:-2:8
12. கோபம் பொறாமை யோபு:-5:2
13. அணுவைப்போல் யோபு:-36:27
14. பிகெமோத் யோபு:-40:15.16
15. மூன்றுபேர் யோபு:-2:11
16. யோபின் குமாரத்திகள் யோபு:-42:17
17. சாத்தான் யோபு:-1:7
18. லிவியாதான் யோபு:-41:34
19. யோபு யோபு:-3:1
20. குதிரை யோபு:-39:25

## CONTACT DETAILS AND BANK DETAILS OF OUR MINISTRIES

**CONTACT DETAILS OF OUR MINISTRIES:**

**CALL:** 9962924900/9789914464.

**WHATSAPP:** 9789914463/7871676100

**E-MAIL:** ratchippu@hotmail.com/ sjddharmaraja@gmail.com

**POSTALADDRESS:** REV. S.J.D. DHARMARAJA, MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST., GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93.

**WEBSITE ADDRESS:** www.ratchippu.in/ratchippu.in

**BANK DETAILS FOR SENDING OFFERTORY**

**NAME:** DHARMARAJA SJD.

**S.B.ACCOUNT NO:** 601071548.

**BANK:** INDIAN BANK,

**BRANCH:** NESAPAKKAM BRANCH

**IFSC CODE:** IDIB000N122.

**BANK ADDRESS:** K.K.NAGAR, CHENNAI-78.

**GOOGLE PAY (G-PAY) NAME AND NO.:** REV. DHARMARAJA SJD: 9789914463

## விடுதலைத் திருநாள் நல்வாழ்த்துக்கள்

**இரட்சிப்பு** பத்திரிக்கையின் அன்பான வாசகர்கள், ஆதரவாளர்கள், படைப்பாளர்கள், அலுவலக-வலைதள பணியாளர்கள், நல்ல-விதைகள் கைபிரதி களப்பணியாளர்கள், அனைத்துத் திருச்சபை விசுவாசக் குடும்பத்தார், அச்சுக்கூடத்து நண்பர்கள், தபால்-துறையினர் ஆகிய அனைவருக்கும் இதயம் கனிந்த சுதந்திர தின நல்வாழ்த்துக்கள். கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.



Ratchippu Tamil Monthly. Registered News Paper.
Date of Publication: First week of every month
RNI Regn. No.: TNTAM/2012/48197. Postal Regn. (RNP) No.: TN/CC (S) DN/468/22-24.
Licensed to post without prepayment under WPP No.: TN/PMG(CCR)WPP-583/22-24.
Due date for Posting: 8th, 9th & 10th of every month. Posted on: 10th August 2022.
Posted at: RMS Patrika Channel Window, Egmore, Chennai-600 008.

# செய்தித்துளிகள்

1. அங்கோலா நாட்டின் ஒரு சுரங்கத்தில் 170-காரட் எடையிலான 'லுலோ-ரோஸ்' வகை வைரம் கிடைத்துள்ளது. கடந்த 300-ஆண்டுகளில் கிடைத்த மிகப் பெரிய வைரம் இது என ஆஸ்திரேலிய வைர நிறுவனம் (லுகாபா) தகவல்.

2. பிஎஸ்என்எல் மற்றும் பிபிஎன்எல் நிறுவனங்களை இணைத்து அவற்றை வலுப்படுத்தவதற்காக ரூ.1.64-லட்சம் கோடி வழங்க ஒன்றிய அரசு முடிவுசெய்து உள்ளதாக ஒன்றிய தொலைத் தொடர்பு மந்திரி அஸ்வினி வைஷ்ணவ் தகவல்.

3. சென்னை மெரினா முதல் கோவளம் வரையுள்ள சுமார் 30-கிமீ கடற்கரையை சீராக்கி அழகுபடுத்த ரூ.100-கோடி நிதி-ஒதுக்கீடு செய்தும் 17-பேர் அடங்கிய வல்லுநர் குழுவை அமைத்தும் உத்தரவிட்டுள்ளது தமிழ்நாடு அரசு.

4. இந்தியா முழுதும் உள்ள 68-நகரங்களில் 2,877 மின்-வாகன சார்ஜிங் மையங்கள் அமைக்க, ஃபேம் இந்தியா-திட்டம்-2ன் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாக கனரக தொழில் இணையமைச்சர் கிரிஷன் பால் குர்ஜார் தகவல்.

5. வரும் 2024-ம் ஆண்டு டி-20 பெண்கள் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியை வங்கதேசத்திலும், 2025-ம் ஆண்டு பெண்கள் 50-ஓவர் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியை இந்தியாவிலும் நடத்துவதற்கு ஐ.சி.சி. ஒப்புதல் அளித்துள்ளது.

Posted on: 10th August 2022

To

If undelivered Please return to:

REV.S.J.D. DHARMARAJA
MISSION DIRECTOR
RATCHIPPU TAMIL MONTHLY,
NO: 4/2-A, BHARATHI STREET,
GANDHI NAGAR, SALIGRAMAM,
CHENNAI -93, TAMILNADU, SOUTH INDIA.

Owned & Published by: S.J.D. Dharmaraja. Published from No:6-A, Ambedkar St., Gandhinagar, Saligramam, Chennai-93. Printed by: S.Isaac Prince at Sams Graphics, No: 1, 12th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. Editor: M. Azariah Gnanadoss.